Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 31 | விளம்பி ஐப்பசி 1958 அக்டோபர் | இதழ் 10

தொல்காப்பியர்

(ஆசிரியர்)

தொல்காப்பியர் :—தமிழ்ப்பெருஞ் சான்றோர்களிலெல்லாம் தலைசிறந்த ஒருவர். இஞ்ஞான்று நம்மனோரால் சிறந்தோராக அறிந்து பாராட்டப் பெற்றுவரும் நூலாசிரியர்கள் பலருள்ளும் மிகவும் பழமை வாய்ந்த நூலாசிரியர் தொல்காப்பியரே. தமிழ்மொழி தழைக்க அரும்பெருந் தொண்டுகள் புரிந்த அறிஞர்கள் யாவரினும் மேலாயவர் அவரே எனலாம். தமிழர்களிலேயே தலையாய பெருந் தமிழர் (தலையாய பெருஞ் சைவர்) என அவரைப் புகழ்தல் பெரிதும் பொருந்துவதாகும். தொல்காப்பியரின் விளைவாற்றல் (Influence) மிகப் பன்னெடுங் காலமாகத் தமிழ் மொழியின்கண் பிரிவற விரவிப் பெரிதும் ஊடுருவி நின்று இன்றளவும் ஒளிவீசித் திகழ்ந்து வருகின்றது. சங்ககாலப் பெருமக்களும் சமய குரவர்களும் பிற்காலப் பெருங்கவிஞர்களுமெல்லாம் ஒருசேரத் தொல்காப்பியர் வகுத்தருளிய செந்தமிழ்ச் செந்நெறி பிறழாது போற்றித் தழுவியே ஒழுகியுள்ளனர். தொல்காப்பியர் நூலாருள் நூல்வல்ல பேராசிரியர். மனித முயற்சியளவினுற் கல்விப்புலமை கைவந்த ஏனையோர் போலாது தெய்வப்புலமை சிறந்து திகழ்ந்த தொல்லாணை நல்லாசிரியர்; வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவர்; பொறிவாயில் ஐந்தவித்த திறலர்;

(ஓரக் குறிப்பு: தொல்காப்பியர்)

பல்புகழ் நிறுத்த படிமையோர். முக்குணவயத்தான் முறை மறந்து அறையும் நூலுரை போதகாசிரியர் போலாது, **சிவஞான முனிவரர்** புகழ்தற்கேற்பத் "தவத்தான் மனந் தூயராய் முக்குணங்களையும் கடந்து இறைவனருள் பெற்றுடையவர்;" நிறைமொழி மாந்தர்; பிழைபடாப் பெற்றியர். இமயமும் பொதியமும் போலும் பெருநிலையிற் றமிழ் மலை எனப் பிறங்குபவர். "ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார்" என்று உரையாசிரியர்கள் அனைவரும் ஒருமுகமாகப் புகழ்ந்து போற்றும் பெருமையினர் அவர். தமிழ் மொழிக்கண் உயர்வற உயர்ந்துள்ள மேலாந்தரமான நூல்களுளெல்லாம் மேம்பாடு மிக்கு விளங்குவது தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம் என்னும் விழுமிய முழுமுதல் இலக்கண நூலேயாகும். அதன் அருமை பெருமைகள் கருதி உரையாசிரியர்கள் அதனைத் "தொல்காப்பியக் கடல்" என்றே குறிப்பிட்டுப் போற்றி யுரைப்பரெனின், அத்தகைய மாட்சிமை மிக்க அரும்பெரு நூலினை இயற்றிய ஆசிரியர் தொல்காப்பியரின் சிறப்பு இனையதென எம் ஒரு நாவாற் கூறல் ஒல்லுமோ ?

உலக மக்களுக்குத் திருவள்ளுவரின் பெருமை ஓரளவு இன்று தெரிந்துள்ளது. ஆனால் தொல்காப்பியரின் பெருமையினை உலகம் இன்னும் போதிய அளவு உணர்ந்துகொண்டிலது. உலகமெலாம் ஒருமுகமாக உயர்த்தெடுத்துப் பாராட்டி யுரைக்கும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் தாமே, ஆசிரியர் தொல்காப்பியனார் அடிச்சுவடு பின்பற்றிச் சென்றனராவரெனின், வேறு பிறிது கூறுதலும் வேண்டுமோ ? 'அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப' எனத் தொல்காப்பியர் சுட்டியதனை ஒட்டியே யன்றே, திருவள்ளுவர் தமது திருக்குறளில் அறம் பொருள் இன்பம் என்னும் மும்முதற் பொருளையும் விளக்கத் தலைப்பட்டார் ?

தொல்காப்பியரும், திருவள்ளுவரும்

'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' எனத் தொல்காப்பியனார் விதித்த தன்றே, அகரத்தின் தலைமை தேற்றி, 'அகர முதல எழுத்தெல்லாம்' எனத் திருவள்ளுவர் துணிந்துரைத்தற் கேதுவாயிற்று? 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப' என்னும்

தொல்காப்பிய நூற்பாவின் எதிரொலி போன்றன்றோ, 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்' என்னும் திருக்குறள் இலங்குகின்றது? 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' எனத் தொல்காப்பியர் கூறியதன் நுட்பம் ஓர்ந்தன்றோ, 'மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்' 'உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்றால்' எனத் திருவள்ளுவர் அருளிச் செய்வாராயினர்! 'இழுமென் மொழியான் விழுமியது நுவறல்' எனத் தொல்காப்பியர் குறித்ததனையே 'தொல்வரவும் தோலும் கெடுக்கும்' என்புழித் திருவள்ளுவர் தழீஇயினார்! 'ஒன்றியுயர்ந்த பாலதாணை' எனவும், 'பால்வரை தெய்வம்' எனவும் தொல்காப்பியர் சுட்டியதே, ஊழ் எனத் திருக்குறளின்கண் தனி இயலாக அமைத்து விரித்துரைக்கப்படுவதாயிற்று! 'அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின் வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப' என்னும் தொல்காப்பியமே, 'பொய்ம்மையும் வாய்மை இடத்த' எனத் திருக்குறள் புகலுதற்கு ஆதரவு தந்தது! 'நிலந்தீநீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' எனத் தொல்காப்பியர் அருளியது, 'சுவைஒளி ஊறோசை நாற்றம் என்றைந்தின் வகைதெரிவான் கட்டே யுலகு' எனவரும் திருக்குறட்கு அரண் செய்தது! 'நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக் கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்' எனப் போதரும் தொல்காப்பியர் கூற்றே, 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல' என்னும் குறளைத் தோற்றியது! களவு கற்பு என இரு பிரிவாக வகுத்து விளக்கப் பெற்ற திருக்குறட் காமத்துப்பால் முழுவதுமே, திருவள்ளுவர் தொல்காப்பியரை எத்துணை யளவுக்குப் பின்பற்றித் தழீஇச் சென்றுள்ளார் என்பதற்குச் சான்று பகரும்! செந்தமிழ் வானத்தில் திங்களும் ஞாயிறும்போல் இணையற்றுத் திகழ்பவர்கள் திருவள்ளுவரும் தொல்காப்பியரும் ஆவர்; திங்கள் ஞாயிற்றினிடமிருந்து ஒளிபெறுதல் போலத் திருவள்ளுவர் பல கருத்துக்களைத் தொல்காப்பியரிட மிருந்து தழீஇக் கொண்டுள்ளனர் என்பது இவ்வாற்றாற்செவ்விதிற் புலனாம்.

இம்மட்டோ! ஞாயிற்றினொளி எவ்வாற்றாலேனும் படாத இடம் இவ்வுலகத்தில் யாண்டும் இன்மைபோல,

தொல்காப்பியரின் விளைவாற்றல் எவ்வாற்றாலேனும் இயையப் பெறாத ஒருசிறு கூறுதல் தமிழ்மொழிக்கண் இல்லை; தொல்காப்பியரின் தூய தமிழ்ப் பெருங் கருத்துக்களை எவ்வகையாலேனும் போற்றி மகிழாத தமிழ்ச் சான்றோர் ஒருவரேனும் இலர்! ஓதாமலே யாவும் ஒருங்குணர்ந்த திருஞான சம்பந்தப் பெருமான் அருளிச் செய்த,

தொல்காப்பியரும்
சமய குரவர்களும்

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

எனவரூஉம் திருப்பாசுரம் தானுமன்றோ, தொல்காப்பியப் புறத்திணை இயலின்கண் 'அமரர்கண் முடியும் அறுவகையானும்' என்று குறிக்கப்பட்ட அறுமுறை வாழ்த்து என்பதனை ஒட்டி அமைவதாயிற்று? இவ்வுண்மை, "அமரர் கண்ணே வந்து முடியும் எனவே அமரர் வேறு என்பதூஉம், அவர் கண்ணே வந்து முடிவன வேறு என்பதூஉம் பெற்றாம். அவை முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகும் ஆம். இவை தத்தம் சிறப்பு வகையான் அமரர் சாதிப்பால என்றல் வேத முடிவு" எனப் போதரும் நச்சினார்க்கினியர் உரையானும் தெளியப்படும். இங்ஙனமே, 'அறிவாற் சிவமேயாயவர்' எனப் புகழப் பெற்ற மாணிக்கவாசகப்பெருமான் அருளிச் செய்த,

"தாயிற் சிறந்தன் றூ நாண்தைய லாருக்கந் நாண்தகைசால்
வேயிற் சிறந்தமென் தோளிதிண் கற்பின் விழுமிதன்றீங்
கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடுமெங் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே"

என வரும் திருச்சிற்றம்பலக் கோவையார் செய்யுள், "உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெனத், தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு" எனப் போதரும் தொல்காப்பிய நூற்பாவின் சொல்லொற்றித் திகழ்தல் காணலாம். ஒப்புயர்வற்ற செந்தமிழ்ச் சித்தர் பெருமானாகிய திருமூலர் அருளிச்செய்த பாடல்கள் திருமந்திரம் என வழங்கப் பெற்றமை, 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே

மந்திரம் என்ப ' என விதித்த தொல்காப்பியர் கருத்தினை யுட்கொண்டே எனலாம். ' அங்கண் முல்லையின் தெய்வம் என்று அருந்தமிழ் உரைக்கும் செங்கண்மால் ' என்புழித் தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமானும் தொல்காப்பிய நூலினை " அருந்தமிழ் " எனத் துதித்துச் சிறப்பித்தார். இன்னோரன்னவை பலவும் கருதியுணரவல்லார்க்குத் தொல்காப்பியரின் சிறப்பு இனையதெனப் புலப்படா நிற்கும்.

தொல்காப்பியர் தொண்டு

நம் அருமைச் செந்தமிழ் மொழிக்குத் தொண்டு புரிந்தோரும் - புரிந்து போதருவோரும் அளவிலர் பல்லாயிரர் எனினும், அவருளெல்லாம் தலையாய முதற்பெருந் தமிழ்த் தொண்டர் தொல்காப்பியரே யாவர் எனத் துணிந்து கூறலாம். ' பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே ' எனத் தொல்காப்பியர் தாமே கூறுமாறுபோல, நிலையாமையே நிலைபெற்ற இவ்வுலகிற் பொருள்களனைத்தும் கணந்தொறும் மாறிமாறிச் சென்று மறைந்தொழியும் தன்மையனவாகக் காணப்படுகின்றன. அங்ஙனம் காலப்போக்கில் மாறி மாறிச் சென்று மாய்ந்தொழியும் தன்மையினைத் தமக்கே யுரிய சிறப்பியல்பாகப் பெற்றவை மக்கள் வழங்கும் மொழிகளே யாகும். " நெருநல் (முன்னாள் - முற்காலம்) வழங்குமொழி இன்றில்லை என்னும் பெருமை யுடைத்திவ் வுலகு " எனவும் கூறத்தக்க முறையில் மொழி வழக்காறுகள் நம்மை அறியாமலே சிறிது சிறிதாக மாறி மாறிச் சென்று பின் அறவே மாய்ந்தொழியும் நிலையை எய்திவிடுகின்றன. *' நடு

---

*" We read of missionaries in Central America who attempted to write down the language of savage tribes, and who compiled with great care a dictionary of all the words they could lay hold of. Returning to the same tribe after the lapse of ten years, they found that this dictionary had become antiquated and useless. Old words had sunk to the ground and new ones had arisen to the surface ; and to all outward appearance the language was completely changed."

—*Prof. Maxmuller, The Science of Language*

அமெரிக்காவில் உள்ள நாகரிகமற்ற மக்கட் கூட்டத்தினரின் மொழியினைச் சமயத் தொண்டர்கள் சிலர் எழுதி வைக்க முயன்றார்கள்; தங்கட்குக் கிடைத்த எல்லாச் சொற்களையும் கொண்டு அகரநிரல் ஒன்றையும் அவர்கள் பெரிதும் கருத்தூன்றித் தொகுத்தார்கள். பத்தாண்டுகள் கழித்து அம்மக்கட் குழுவினரிடையேயே அவர்கள் மீண்டும் சென்று பார்த்தபோது, அவர்கள் தொகுத்த அகரநிரலானது பழமையாய்ப் பழுதுற்றும் பயனற்றும் ஒழிந்தமையினை உணர்ந்தார்கள். பழைய சொற்கள் மண்ணோடு மண்ணாய் மறைந்து விட்டன; புதிய சொற்கள் தலைதூக்கி நின்றன; அந்த மொழியானது அறவே மாறிப் போயிருந்தது...' எனப் பேரறிஞர் மாக்சுமுல்லர் கூறுதலால் மொழிகள் எத்துணை விரைவில் மாறி மறைந்து விடும் இயல்பின என்பது விளங்கும். வடமொழியானது வேத காலத்தில் வழங்கிய நிலைக்கும், காவிய காலத்தில் வழங்கிய நிலைக்கும் பெரிதும் வேறுபாடுண்டு. போவுல்ப் (Beowulf) கேட்மான் (Caedmon) முதலியவர்களின் கால ஆங்கிலத்திற்கும், லேங்க்லண்ட் (Langland) சாசர் (Chaucer) கால ஆங்கிலத்திற்கும், இந்நாளில் வழங்கும் ஆங்கிலத்திற்கும் உள்ள இடையீடு மிகப் பெரிது. தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் துளு முதலிய மொழிகள் ஒன்றினொன்று அறவே வேறுபட்டு வெவ்வேறு தனி மொழிகளாக நேர்ந்தமையும் கருதற்பாலது. மக்களின் கூட்டு வாழ்க்கைக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் மொழியானது திரிபுபடாமல் நிலைத்த தன்மையுடன், நெடுங்காலம் ஒரு தொடர்புபட்டு வழங்கவேண்டுவது இன்றியமையாததாய் இருக்கின்றது! அப்போதுதான் முன்னே முன்னே வாழ்ந்த மக்களின் கருத்தும் அறிவும் அனுபவமும் பிறவும் இடையறவு படாமல், பின்னே பின்னே தோன்றலுறும் மக்களுக்கெல்லாம் பயன்படும் வகையில் ஒரு தொடர்புபட்டு வழங்கி நலம் விளைத்தல் இயலும்! அங்ஙனம் இன்றாயின், தொல்காப்பியர் திருவள்ளுவர் திருநாவுக்கரசர் மெய்கண்டார் போன்ற சான்றோர் அருளிச் செய்த பொருண்மொழிகளை இன்று நாம் கற்றுப் பயனெய்துதல் இயலுமோ? எனவேதான், அவரவரும் தத்தம் தாய்மொழியை என்றும் மாறாவகையில் நின்று நிலவுமாறு இலக்கண இலக்கிய வரை

யறைகள் வகுத்து வளம்படுத்தி வளர்க்கவேண்டி யுள்ளது.* "இலக்கண இலக்கிய நூல்களும் போக்குவரவுத் தொடர்பு வசதிகளும் இல்லாமல் செய்யப்பட்டால் இங்கிலாந்து - அமெரிக்க நாடுகளின் மொழிகள்கூட, பிரான்சு இத்தாலி ஆகிய நாடுகளின் மொழிகளைப்போல மிகவிரைவில் திரிபெய்திவிடும்" எனப் பேராசிரியர் சாய்ஸ் கூறுதலும் கருதி யுணர்தற்குரியது. இவ்வுண்மைகள் பலவும் உணர்ந்து, நம் செந்தமிழ் மொழியினை என்றும் குன்றா இளமை எழிலிற் பொலிவிக்கத் தொண்டுகள் புரிந்த சான்றோர்கள் யாவரினும் தொல்காப்பியர் தனி முதற் பெருஞ் சிறப்பு உடையவராவர்! அவர் தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆராய்ந்தார்; எழுத்தும் சொல்லும் பொருளும் நாடினார்; முந்துநூல் கண்டார்; முறைப்பட எண்ணினார்; செந்தமிழ் இயற்கை சிவணிய புலம் தொகுத்தார்; மயங்கா மரபின் எழுத்து (இலக்கியம்) முறை காட்டினார்; தொல்காப்பியம் என்னும் போக்கறு பனுவலை ஆக்கித் தந்தார்! "அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்" எனச் சிவஞான சித்தியார் கூறுவது போன்று, தமிழ் மொழியானது இன்றளவும் பெற்றுள்ள வாழ்வனைத்தும் தொல்காப்பியர் தொண்டால் விளைந்த ஆக்கமேயாகும் எனத் துணிந்து கூறலாம். இங்ஙனம் தொல்காப்பியர் தமிழுக்குச் செய்தருளிய "நீளுமித் தொண்டின் நீர்மை நினைக்கில்ஆர் அளக்க வல்லார்?"

தொல்காப்பியர் 'மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவர்.' பல்புகழ் நிறுத்த படிமை (தவவொழுக்கம்) யராதலின், 'நாலிரு வழக்கிற் றாபதப் பக்கம்' ஆய அட்டாங்க யோகம் (சித்தி. 273) முற்றும் தேர்ந்தவர். திணைகளையும் திணைக்குரிய கருப்பொருள்களையும் விளக்குங்கால், முதற்கண் தெய்வத்தை நிறுத்திச் சிறப்பித்துக் கூறுதலின், இவர்தம் கடவுளுணர்ச்சி இனையதெனப் புலப்படும். 'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப' 'கடவுள் வாழ்த்

---

*"Destroy literature and facility of intercommunication, and the languages of England and America would soon be different as those of France and Italy." —*Prof. Sayce*

தொடு கண்ணிய வருமே' 'தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல்' என்னும் தொடர்களாற் கடவுள் வழிபாட்டில் இவர்க்குள்ள தெளிவும் உறுதியும் தெரிகின்றது. "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூல் ஆகும்" என்பதனால் தொல்காப்பியர் கூறும் கடவுள் இலக்கணம் விளங்கும். உயிர்கள் உய்தி பெறுதற்பொருட்டு இறைவனே முதற்கண் நூல்களை அருளிச் செய்வன் என்பது,

"ஆரணம் ஆக மங்கள் அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளா னாகில் கதிப்பவர் இல்லை யாரும்
நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாம்
சீரணி குருசந் தானச் செய்தியும் சென்றி டாவே"

எனவரும் சிவஞானசித்தியார் செய்யுளானும் உணரப்படும்.

தொல்காப்பியர் சமயம்

'மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய......' என்புழிப் "படிமையாவது தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கண் செய்தமைத்த தேவர்மேல் வந்தது. அவருடைய பொருளாவன பூசையும் விழாவும் முதலியன" என இளம்பூரணர் தெருட்டுதலின், கடவுளரின் உருவ வழிபாடு தொல்காப்பியர்க்கு உடன்பாடாய்,

"படைப்பாதித் தொழிலும் பத்தர்க் கருளும்பா வனையும் நூலும்
இடப்பாக மாத ராளோ டியைந்துயிர்க் கின்பம் என்றும்
அடைப்பானும் அதுவும் முத்தி அளித்திடும் யோகும் பாசம்
துடைப்பானும் தொழிலும் மேனி தொடக்கானேற் சொல்லொணாதே"

எனவரும் சிவஞானசித்தியார் கருத்துக்கு அரண் செய்கின்றது. 'மாயோன் மேய காடுறை யுலகம்......' என்னும் நூற்பாவால் திருமால் முருகன் இந்திரன் வருணன் முதலிய கடவுளரைத் தொல்காப்பியர் எடுத்தோதியமை காணலாம். சேயோன் என்னும் சொல் முருகனையும் சிவபிரானையும் ஒருங்கே குறிக்கும். வேந்தன் வருணன் எனப்பட்டார் பண்டு தமிழகத்திற்கே யுரிய கடவுளராக விளங்கினர் போலும்! 'கொற்றவை நிலை' என்னும் தொடரால் கொற்றவை வழிபாடும் பண்டுதொட்டிருந்து வருதல் அறியலாம். "காலம் உலகம் உயிரே உடம்பே பால்வரை

தெய்வம் வினையே பூதம் ஞாயிறு திங்கள் சொல்என வரூஉம் ஆயிரைந்தொடு பிறவும் அன்ன " என்னும் நூற்பாவால் தொல்காப்பியர் காலக் கடவுட் கொள்கையியல் பலவும் நுனித்துணரலாம். "காலம்-காலக் கடவுள். வினை-அறத்தெய்வம். சொல் - நாமகளாகிய தெய்வம். பால்வரை தெய்வம் - எல்லார்க்கும் இன்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுப்பது(நியதி தத்துவம்)" எனச் சேனாவரையர், தெய்வச் சிலையார் முதலினோர் விளக்குதல் உணரற்பாலத். எனவே,

" அவ்வினையைச் செய்வதனில் அவ்வினைஞர் தாம்சென் றங்
கவ்வினையைக் காந்த பசாசம்போல்—அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு ?"

எனச் சிவஞானபோதம் தெளிவுறுத்துற்கேற்ப, இறைவனே இருவினைகளின் பயனை உயிர்களுக்குக் கூட்டி நுகர்விப்பதன்றி, இருவினைகளும் தம்மைச் செய்தானைத் தாமே சென்றணையும் என்னும் சமணர் கொள்கை யுடையரல்லர் தொல்காப்பியர் என்பது இதனால் இனிது பெறப்படும். இச் சீரிய கொள்கை சிவநெறிக்கே யுரிய சிறப்பியல் புடையது என்னும் உண்மையினை,

" செய்வினையும் செய்வானும் அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லைஎன
உய்வகையாற் பொருள்சிவன்என் றருளாலே உணர்ந்தறிந்தார் "

எனப் போதரும் பெரிய புராணம் கொண்டுணராம். திருவருட்பயன் என்னும் சித்தாந்த நூலும் " செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும் உய்வான் உளன்என்று உணர்" என உணர்த்துதல் உளங்கொளத் தக்கது. தொல்காப்பியர் சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருளுண்மையும் ஒப்பியவர் என்பது, உலகம் உயிர் உடம்பு கடவுள் கந்தழி எனவரும் சொற்கள், சொற்றொடர்களால் நன்கினிது தெளியப்படுகின்றது. இலக்கணக் கொத்துரைச் சுவாமிநாத தேசிகர், " வேண்டிய கல்வி யாண்டு மூன்று இறவாது என்புழி மூன்றனைப்

பதிபசு பாசம் என்றும், தத்துவமசி வாக்கியம் என்றும், அறம் பொருளின்பம் என்றும், எழுத்துச் சொற்பொருள் என்றும், ஆண்டுகள் என்றும் உரைப்பர்" எனக் குறிக்கும் சுவைமிகு கருத்தும் ஈண்டுப் பொன்போற் பொதிந்து போற்றத் தகும். இங்ஙனமே "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்" என்பது, சிவபிரான் திருமால் அம்மை மூத்த பிள்ளையார் இளைய பிள்ளையார் ஞாயிறு என்னும் அறுவகைக் கடவுளரை வழிபடும் சைவம் வைணவம் சாக்தேயம் காணுபத்யம் கௌமாரம் சௌரம் என்னும் அறுவகைச் சமய ஒழுகலாறுகளைக் குறித்ததாகக் கொள்வோரும் உண்டு. நிலந்தீ நீர்வளி விசும்போடு ஐந்து பூதம் கொண்ட தொல்காப்பியர் நான்கு பூதமே உடன்பட்ட பௌத்த சமயத்தினராகார். காஞ்சித்திணையால் உலக நிலையாமையை வற்புறுத்திய இவர், "மூவா முதலா உலகம் ஒரு மூன்றும் ஏத்த" எனத் திருத்தக்கதேவர் பாடுதற்கேற்ப 'உலகம் நித்தியம்' என்று துணிந்த சமண்சமயத்தவர் அல்லர். தொல்காப்பியர் காலத்திற் புத்தம் சமணம் போன்ற சமயங்கள் தோன்றப்பெறவில்லை என்பதே அறிஞர் துணிபு. இன்னோரன்ன செய்திகள் எங்ஙனமாயினும், "சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" என முடித்துரைத்தலால், தொல்காப்பியர் சமய வாழ்வின் சிறப்பும் இன்றியமையாமையும் பெரிதும் வலியுறுத்தியவராவர் என்பது மட்டும் எவரும் மறுக்கொணாத தொன்று.

தொல்காப்பியம் உலகிலேயே மிகப் பழைய இலக்கண நூல். எத்துணையோ மொழிகள் இன்றளவும் தமக்கெனத் திருந்திய இலக்கணம் அமையப் பெறுமற் கிடக்கின்றன.

தொல்காப்பிய நுட்பங்கள்

இஞ்ஞான்று உலகம் முழுவதும் பரவி அறிவுலகில் அரசோச்சி நிற்கும் அத்துணைப் பெருமை பெற்றுடைய ஆங்கில மொழிக்குத் தானும் இன்னும் இலக்கண அமைப்பு விதிகள் நன்கினிது செம்மையுற வரையறுக்கப் படவில்லை. ஓரளவு திருந்திய இலக்கணம் பெற்றுள்ளதெனப்படும் வடமொழி தானும் எழுத்தும் சொல்லும் பிறவும் பற்றிய இலக்கணம் பெற்றுள்ளதே யன்றித் "தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழ்" எனப் பரிபாடல் பாராட்டும் பொருளிலக்கணத்தினைத் தமிழ்மொழி போலப்

பெற்றிலது. *தொல்காப்பியர் எழுத்துக்களுக்கு உயிர் என்றும் மெய் என்றும் பெயர் அமைத்த தொன்றே பெரிதும் வியத்தற்குரியதாக உள்ளது. எழுத்துக்களின் பிறப்பியலை அவர் விளக்கியுள்ள முறை இஞ்ஞான்றை ஒலிநூல் (Phonetics) நுட்பங்களுக்குப் பெரிதும் இயைந்துள்ளது. தமிழ் நெடுங் கணக்கினுள் அகர முதல் னகர இறுவாய்க் கிடக்கை முறையாதற்குக் காரணம் வியத்தகு முறையில் விளக்கப்பட்டுள்ளது. இவ்வறிவு நெறியினைத் தமிழினின்றே பின்னுளில் வடமொழி பெறுவதாயிற்று என்பதனை அதனோடொத்த இனமொழிகளோடு ஒப்பிட்டுணரலாம். இன்னின்ன எழுத்துக்கள் மொழியின் முதலிடைகடைகளிற் பயின்றுவரும் எனவும், "உச்சகாரம் இருமொழிக்குரித்தே" "உப்பகாரம் ஒன்றென மொழிப" என்றாற் போலவும் ஆராய்ந்து அறுதியிட்டு வரையறுத்துக் கூறியிருத்தல் தொல்காப்பியத்தின் திட்பநுட்பம் தெரிக்கும் சான்றாம். குற்றியலுகரம் ஆய்தம் என்னும் தமிழ் ஒலிகளின் சிறப்பும் பெரிதும் போற்றற்பாலது. இங்ஙனமே †சொற்களுக்குத் திணைப்பகுப்பும் பாற்பகுப்பும் அறிவுக்கும் இயற்கைக்கும் பொருந்த வகுத்தமை எத்துணையும் வழுத்துதற்குரிய தொன்றாம். அறிவுக்கும் இயற்கைக்கும் பொருந்தாத பிறமொழிகளின் பாற் பாகுபாட்டை நோக்கியுணர வல்லார்க்கே இவ்வருமைப்பாடு வியப்பூட்டா

---

*"Tamil grammarians designate vowels by a *beautiful metaphor*, as Uyir or the life of a word; consonants as mey or the body; and the junction of a vowel and consonant as Uyir mey, or an animated body." —*Dr. Caldwell*

†The classification of nouns in Tamil is decidedly more philosophical; for the difference between rational beings and beings or things which are destitute of reason is more momentous and essential than any difference that exists between the sexes...The peculiar Dravidian law of gender which has now been described would appear to be a result of progressive intellectual and grammatical cultivation. —*Dr. Caldwell*

நிற்கும். "வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது நினையும் காலைக் காலமொடு தோன்றும்" என்னும் நூற்பா வானது, தன்பயனை யூட்டுங்கால் வினையானது உயர்ந்தார் தாழ்ந்தார் - கற்றூர் கல்லார் - செல்வர் வறியர் என வேற்றுமை பாராட்டாது; தன் பயனை யூட்டுதற்கண் காலம் வருந்துணையும் காத்திருந்தேனும் ஊட்டிவிடும் எனப் பிறிதொரு பொருளும் படுமாறு கூறியிருப்பது, தொல்காப் பியரின் மெய்யுணர்வு மேம்பாட்டைக் காட்டும். ஒருசிலர், பாணினியார் தமது அட்டாத்தியாயியின்கண் சொற்களைப் பகுதி விகுதிகளாகப் பிரித்துத் "தாதுக்கள்" (Roots) இவையென விளக்கியவாறுபோல விளக்கிற்றிலர் என்பர். அவர் அறியார்! என்னை? தொல்காப்பியர் ஆங்காங்கு முதனிலை சாரியை சந்தி இடைநிலை விகாரம் விகுதி என் பவற்றை அவ்வவற்றிற்குரிய இடத்தில் விளக்கியன்றிச் சென்றிலராகலானும், மாணுக்கர்க் குணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக் கூருது உய்த்துணர வைத்தல் அவர்க்கு இயல்பாகலானும், வடமொழியிற் போலச் செயற்கை நெறிகளினன்றி இயற்கை நெறிகளினுலேயே சொற்களின் அமைப்பும் புணர்ப்பும் தமிழ்மொழிக்கண் ஆக்கிக் கொள்ளப்படுதலால் பகுதி விகுதி முதலியன யாவர்க்கும் இனிது விளங்கிக் கிடத்தலானும், பாணினி யார் போலத் தொல்காப்பியர் சொற்களுக்குப் பகுதி விகுதிகள் பிரித்துக் காட்டாது சென்றமை குற்றம் அன் றென்க. இனிப் பொருளிலக்கணத்தின் சிறப்புக்கு ஓர் எல்லையே இல்லை. எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே வரையறைகள் விதித்த ஏனைய மொழிகளின் இலக்கணம் போலாது, மன்பதை வாழ்க்கைக்கே அப்பகுதி இலக்கணம் வகுத்து விடுகின்றது. வாழ்க்கையினை அகம், புறம் எனப் பகுத்த பாகுபாடும், "மக்கள் நுதலிய அகனைந் திணையும் சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெருஅர்" எனவும், "மிக்கோ ளுயினும் கடிவரை யின்றே" "பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும் நீத்தகன் றுரையார் என்மனுர் புலவர்" எனவும் பிறவாறு மெல்லாம் வகுத்த விதிகளும் நினைத்தொறும் நினைத்தொறும் களிப்பூட்டுவனவாகும். முதற் பொருள் உரிப்பொருள் கருப்பொருள் எனத் திணைகளைப் பாகுபாடு செய்து விரித்தமை, இஞ்ஞான்றை எல்லாக் கலைகளின்

விரிவுக்கும் இடம்தரூஉம் அடிப்படையாக அமைந்தொளி ரும் சிறப்புடையதாய் அறிஞர்கட்கு ஆராப் பெருவிருந் தாவதெனலாம். இத்தகைய ஒப்புயர்வற்ற இலக்கண நூலை இயற்றி யுதவிய தமிழ்ப் பெருஞ் சான்றோர் தலைவராகிய தொல்காப்பியரைத் தமிழராகிய நாம் அனைவரும் நன்றி யுணர்வோடு பெரிதும் போற்றக் கடமைப்பட் டுள்ளோம்.

தொல்காப் பியம்என்னும் தொன்மைப் பெருநூலின்
ஒல்காப் பெருஞ்சிறப்பை உய்த்துணரின்,—அல்கா
தறிதோ றறியாமை ஆழ்ந்தகன் றேங்கித்
தொடுவானம் போற்செல் லும் சூழ்ந்து !

பழமை பெருமைநூற் பண்பனைத்தும் வாய்ந்து
விழுமியர்கள் எல்லாம் வியப்ப,—முழுமணியாய்ச்
செந்தமிழ்க்கே ஓர்சிறந்த தெய்விகநூ லாய்விளங்கும்
நந்தம்அருந் **தொல்காப் பியம்** !

மொழிகள் பலப்பலதாம் மூதுலகில் உண்டு !
ஒழிவில் இலக்கணமும் உண்டு—வழிமுறையே
என்றாலும், **தொல்காப் பியம்**போல் இலக்கணநூல்
ஒன்றேனும் இவ்வுலகத் தில்.

வழுத்துபெரு மாண்புடைய மற்றை மொழிகள்
எழுத்தொடு சொல்லின் இயல்பே—முழுத்தும்
எடுத்துரைக்க மாட்டா திளைப்பப், பொருளும்
தொடுத்துரைக்கும் **தொல்காப் பியம்**.

பாணினியார் நூற்செறிவும், பண்பார் **பதஞ்சலியார்**
காணினிய திட்பக் கருத்தியலும்,—சேணினிய
சீர்அரித்தாட் டில்சொற் றெளிவும், அளவையும்சால்
பேரெழிற்றும் **தொல்காப் பியம்** !

ஐந்தெனும்பல் லாயிரமாம் ஆண்டுகட்கு முன்னரே
செந்தமிழில் அன்றிச், சிறந்துமிகும்—இந்தவகை
நாகரிகத் தெய்வநல நல்லறிவு நூல்களொன் றுண்
டாக நினைப்பவும்யார்க் காம் ?

—முருகவேள்

இனியவர் யார் ?

வல்லை - பாலசுப்பிரமணியம், பி. ஏ.

ஒரு பசு தன் கன்ருேடு இருக்கும்போது, புலி ஒன்று கன்றினைக் கவ்விச் செல்வதற்கு வந்தால், பசுவிற்கு என்று மில்லாத ஆற்றல் வந்துவிடுகிறது. அது அசுரபலத்தையே பெற்றுவிடுகிறது என்று சொல்லலாம். கன்றினைக் காப்பதற்காகத் தன் உயிரையும் பொருட்படுத்தாமல், தலையைத் தாழ்த்திக் கொம்புகளை நிமிர்த்தி, குறிபார்த்துப் புலியின் அடிவயிற்றில் குத்திக் குடலைச் சரித்துக் கொன்றுவிடுகிறது. ஆனல், அதே பசு ஏதோவொரு காரணத்தினல் தன் கன்றினைப் பிரிந்திருக்கும் நிலையில் புலிதாக்க வருமானல், அஞ்சி நடுநடுங்கிப் புலிக்கு இரையாகிவிடுகிறது.

இதுபோன்ற உண்மை நிகழ்ச்சிகள் பல திருப்பதியை அடுத்துள்ள காட்டில் நடந்திருக்கின்றனவென்று என் நண்பரான காட்டிலாகா அதிகாரி ஒருவர் எனக்குச் சொல்லி யிருக்கிருர். பார்க்கப்போனல், இதில் ஒன்றும் வியப்பில்லை. உயிர்வர்க்கங்கள் இடையருது நிலைபெற்றிருப்பதற்கு இயற்கை இத்தகைய தாய்ப் பாசத்தை ஜீவராசிகளிடம் செறித்துவைத்துள்ளது. பசு இனத்தில் மட்டுமன்றி, மற்றெல்லா உயிரினங்களிலுங்கூட இத்தகைய தாயன்பைக் காணலாம். பூனை, நாய், கோழி முதலியவை தம் குட்டிகளையும், குஞ்சுகளையும் காப்பதற்காகத் தம்மினும் எத்தனையோ மடங்கு வலிய பகைவரோடு எத்துணை ஆக்ரோஷத்தோடு போராடுகின்றன என்பதை நாடோறும் நாம் காண்கிருேம்.

பூனை முதலிய கீழ்ப்பட்ட உயிரினங்கள் தம் குட்டிகளுக்குப் பாலூட்டி வளர்க்கும் பருவத்தில், இணைவிழைச்சுக்காக ஆண்விலங்குகள் வந்தால், அவற்றுடன் சீறிப் போரிட்டுத் துரத்தி அடித்துவிடுகின்றன. இதுபற்றியே, பூனையினத்தில் ஆண் (கடுவன்) பூனை தனது கலவி யின்பத்திற்குக் குட்டிகள் இடையூருக இருப்பதையறிந்து பெண்பூனை யில்லாத சமயம் பார்த்து அவற்றை ஒவ்வொன்ருகக் கொன்றுவிடுவதையும், குட்டிகளுக்கு இரை தேடிக் கொணரும் பெண்பூனை அவற்றைக் காணுமல் சோகக்

குரலெழுப்பி வீடெங்கும் அலைவதையும் அடிக்கடிப் பார்க்கிறோம்.

உயிர்வர்க்கங்களிடையே காணப்படுகிற இந்தத் தாய்ப் பாசத்தைக் கவிஞர்களும் நன்றாக உணர்ந்திருக்கின்றார்கள். இந்திரசித்துக்கும் இலக்குவனுக்கும் நடந்த உக்கிரமான போரில் இலக்குவன் விடுத்த அம்புகளின் கொடுமையைக் கூறவந்த கம்பர், அவற்றைத் தீ, இடி, பேய் முதலியவற்றோடு ஒப்பிட்டதுடன் அமையாமல், "கழுகின் தாய் ஒப்பன" எனக் கூறியுள்ள நயம் வியந்து பாராட்டுதற்குரியதாகும்.

உயிரினங்களில் இன்னும் கீழ்ப்பட்ட நிலைகளுக்குச் சொல்வோமானால், அங்கே ஓர் உண்மையைக் காண்கிறோம். அஃதாவது, அவற்றின் நோக்கமெல்லாம் இனவிருத்தி செய்தலேயாகும். அது நிறைவேறிவிட்டால், இனவிருத்திக்குக் காரணமாயிருந்த ஆண் பூச்சிகளைக் கொன்று விடவும் அவை தயங்குவதில்லை. இத்தகைய நிலையினைத் தேனீக்களிடையே காண்கிறோம். ராணி ஈ கருவுற்று முட்டையிடுந் தறுவாயில், வேலைக்கார ஈக்களெல்லாம் சேர்ந்து கொஞ்சங்கூட இரக்கமின்றி ஆண் ஈயைக் கொட்டிக் கொன்றுவிடுகின்றன.

பகுத்தறிவற்ற உயிர்களிடையே தாயன்பு இவ்வாறு இருக்குமானால், ஆறறிவுபடைத்த மக்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? வயது வந்து மணமான பெண்ணொருத்தி குழந்தைப் பேற்றிற்காகத் தவங்கிடக்கிறாள். குழந்தை பிறந்ததும், அதைத் தன் உயிரினும் மேலாகக் கண்ணுங் கருத்துமாய்ப் போற்றி வளர்க்கிறாள்.

ஒரு பெண் தனது கணவனுடைய கலவி வேட்கைக்கு இணங்குவதாய் இருந்தால், தான் மார்பகத்துப் பாலூட்டி வளர்க்கிற குழந்தையின் உடல் நலத்திற்குக் கேடு நேருமென அஞ்சுகிற சந்தர்ப்பத்தில், அவள் தன் கணவனுடைய சீற்றத்தைப் பொறுத்துக் கொண்டேனும், கலவியைத் தவிர்த்து மகவின் உடல் நலத்தைப் பேணுகிறாள்.

என்னோடு நெருங்கிய நட்புரிமை பூண்டவரும், நான் தமக்கையைப்போல் கருதுபவருமான ஒரு பெண்மணி இருக்கிறார். இப்போது அவருக்கு நடுத்தர வயது. சிறந்த பண்பும், அறிவும், நாகரிகமும் படைத்தவர். அவரது

இளமைப் பருவத்தில் நடந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் என்னிடம் சுவைபடச் சொல்வதில் அவருக்குப் பெருவிருப்பம். ஒரு மன்னனுக்குரிய சுகபோக வாழ்வினையுடைய பெற்றோர்களுக்கு ஒரே ஒரு பெண்ணாகப் பிறந்தவர். செல்வத்துக்கும் சீராட்டுதலுக்கும் கேட்க வேண்டுமா? அவருக்கு உரிய பருவத்தில் திருமணம் நடந்து, அடுத்த ஆண்டிலேயே அவர் ஓர் ஆண்மகவுக்குத் தாயானார். அவருடைய கணவர் குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்தது. சிறிய வீடு, இளம்பருவக் காதலர்கள் படுப்பதற்கென்று தனியறை எதுவும் அங்கில்லை. சிறியவர்களும், பெரியவர்களும், குழந்தைகளுமாக அவ்வீட்டில் மக்கள் நிரம்பியிருந்தனர். இந்த நிலையில், கைக்குழந்தையையுடைய அப்பெண்மணியைத் தங்களோடு வந்திருக்குமாறு அவர் பெற்றோர்கள் அவரை வருந்தியழைத்தார்கள். அவர் கணவரும் அதையே ஆதரித்தார். அவர் மனத்திலிருந்த காரணம் வேறு. அவர் கலவிவேட்கை மிக்கவர் என்பதை மட்டும் இங்கே சொல்லிவைத்தல் சாலும். ஆனால், அப்பெண்மணி பல வசதிக் குறைவுகளுக்கிடையே தம் கணவர் வீட்டில் இருக்க விரும்பினாரேயன்றி, பெற்றோருடைய விசாலமான மாளிகையில் இருக்க விரும்பினாரில்லை. அன்பர்களே, காரணம் கேட்கிறீர்களா? கைக்குழந்தையின் உடல் நலந்தான்.

காலப்போக்கில் குழந்தைகள் வளர்ந்து, அவைகள் வாழ்வுக்கு இனி தாயின் அரவணைப்பு தேவையில்லை என்னும் நிலைமை வரும்போது, தாயின் மனநிலையில் பையப் பைய ஒரு மாற்றம் ஏற்படுவதைக் காண்கிறோம். இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆவினையொப்ப, கொஞ்சகாலம் அவள் மனம் மகன், கணவன் இவ்விருவருக்குமிடையே ஊசலாடி, இறுதியில், இருவருக்கும் ஆபத்து சூழ்ந்துள்ள ஓர் இடர்ப்பாடான சந்தர்ப்பத்தில் மகனைப் புறக்கணித்துக் கணவனைக் காப்பாற்ற விரையும் மனப்பக்குவத்தினையும், முதிர்ச்சியினையும் அடைகிறாள்.

நமது செந்தமிழ்க் காவியங்களிலிருந்து ஒரு சில எடுத்துக் காட்டுகளால் இவ்வுண்மையினை விளக்குவேன்:

இராமனுக்கு முடிசூட்டுவிழா நடக்கப் போகிறதென்பதைக் கோசலை தன் தோழிகளிடமிருந்து தெரிந்து

கொள்ளுகிறாள். பெற்றெடுத்த தாயல்லவா? தன் மகனுக்கு வரப்போகும் சிறப்பை எண்ணுந்தோறும் அவள் உள்ளத்தில் பெரியதோர் உவகைக்கடல் பொங்கி எழுந்தது.

ஆனால், அம்மகிழ்ச்சியளவில் அவள் நின்றுவிட்டாளா?

ஒரு பெருங்கடல். நீங்கள் கண்ணெதிரே பார்க்கின்றீர்கள். நீங்கள் பார்த்துக்கொண் டிருக்கும்போதே அக்கடலிலுள்ள அவ்வளவு தண்ணீரும் வற்றிப் பாலைவனமாகிவிடுகிறது! இது என்ன அண்டப்புளுகு என்பீர்களோ! ஒருவேளை இது புறவுலகில் நடைபெறாது இருக்கலாம். கோசலையின் உள்ளத்தில் புகுந்து பார்ப்பீர்களானால், இக்காட்சியையே கண்டிருப்பீர்கள். இதைக் கம்பர் கண்டார். அவர் அவள் உள்ளத்தைச் சித்தரிக்கும் அழகைப் பாருங்கள்:

"சிறக்கும் செல்வம் மகற்கெனச் சிந்தையில்
பிறக்கும் பேரு வகைக்கடல் பெட்பற
வறக்கும் மாவட வைக்கனல் ஆனதால்
துறக்கும் மன்னவன் என்னும் துணுக்கமே"

இம் மகிழ்ச்சி கோசலையின் உள்ளத்தில் ஒரு கணந்தானும் தங்கவில்லை. அடுத்த கணத்தில் வேறு எதையோ யோசித்தாள். "இராமன் முடிசூடுவதென்றால் பொருள் என்ன? என் கணவரான தசரதர் தவம் செய்யக் காட்டுக்குப் போவாரல்லவா? ஆஹா! இதன் விளைவு இப்படியா ஆயிற்று?" என்றெல்லாம் அவள் நினைத்தாள். அவள் உள்ளத்தில் அலைமோதிக்கொண்டிருந்த உவகைக்கடல் வற்றிப்போனதில் வியப்பென்ன?

நேயர்களே, பெண்மனம் போகும் போக்கினைப் பார்த்தீர்களா?

இனி, கம்பர் காட்டும் மற்றொரு காட்சியினைக் காண்போம். இலங்கையில் மூண்ட பெரும்போரில் இலக்குவன் வாளியினால் இந்திரசித்தன் தலை அறுபட்டு மடிந்தான். இவ் அவலச் செய்தியைக் கேட்ட அவன் தாய் மண்டோதரி வெட்டுண்ட பாம்பைப்போல் பதைபதைத்து, போர்க்களத்துக்கு ஓடோடியும் வந்து, மலையின்மேல் மயில் விழுந்ததென்ன, தலையற்ற மைந்தன் உடலின்மேல் மறுகி விழுந்து, பலவாறாகப் புலம்பினாள். அவளுக்கு உலகமே இருண்டு

விட்டது போலாயிற்று. அவளும் இறந்து விட்டாளோ வென எண்ணத்தக்க அளவுக்கு அவள் நெடுநேரம் மூச்சும் உணர்வும் அற்றவளானுள். பின்னர்ச் சிறிது சிறிதாக உணர்வு பெற்றெழுந்தாள். சிந்திக்கத் தொடங்கினுள். அவள் மனத்திரையில் அவள் நாயகனுகிய இராவணன் தோன்றினுன். உடனே அவள் நெஞ்சம் துணுக்குற்றது. உலகெலாம் கலக்கி வென்றவனுகிய மேகநாதன் மாண்டது கூட அப்போது அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. இராவணன் இன்னும் எஞ்சி நின்ருன். நாளைக்கு அவனும் இதே கதியடைவான் அல்லவா என்பதை நினைத்துப் பார்த்த போது, மண்டோதரியின் துயரம் எல்லையற்றதாயிற்று. அவள் மனத்துயரினை எடுத்துக்காட்டும் கம்பர் பாட்டைக் கலைக்கண்ணேடு காணுங்கள் :

"பஞ்சுஎரி உற்றதென்ன அரக்கர்தம் பரவையெல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல விளிந்ததே மீண்டதில்லை ;
அஞ்சினேன், அஞ்சினேன், அச்சீதையென் றமிழ்தில் தோய்த்த
நஞ்சினுல் இலங்கை வேந்து நாளை இத்தகையன் அன்ரே ?"

ஒரே தண்டவாளத்தின்மேல் முன்னும் பின்னுமாகச் செல்லும் இரண்டு புகை வண்டித் தொடர்களைப்போல, தமிழ்க்காவியப் பாதையில் கம்பராமாயணமும், கச்சியப்பரின் கந்தபுராணமும் அமைந்திருக்கின்றன. பாத்திரங்கள் வேறுவேருனவர்களே யன்றி, கதைப்போக்கும் நிகழ்ச்சிகளும் ஏறத்தாழ ஒன்ருகவே இருக்கின்றன. இராவணனுக்கு இந்திரசித்தன் தலைமகனுய் இருந்ததுபோல், சூரபதுமனுக்குப் பானுகோபன் தலைமகனுய் இருந்தான். இராமன் தம்பியாகிய இலக்குவன் இந்திரசித்தனைக் கொன்றதுபோல, முருகப்பெருமானுடைய தம்பி முறையிலுள்ள வீரவாகுதேவர் பானுகோபனைக் கொன்ருர். அங்கே மண்டோதரி புலம்பியதையொப்ப, இங்குச் சூரன் மனைவியாகிய பதுமகோமளை புலம்புகிருள். இதில் அதிசயம் என்னவென்ருல், இருவரும் இச்சந்தர்ப்பத்தில் ஒரே மாதிரி நினைப்பதுதான். பதுமகோமளை கூறுவதைக் கேளுங்கள் : "செயற்கரும் தவஞ்செய்து பிறந்த என் மைந்தனே ! 'ஏற்கெனவே துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் தேவர்களுக்கு மேலும் இடுக்கண் செய்யாதீர்கள். இது நன்றல்ல' என அசுரர்களுக்கு எவ்வளவோ எடுத்துச் சொன்னேன்.

ன் சொல்லை அவர்கள் கேட்கவில்லை. அதன் விளைவாக, என் மகனே, உன்னை இழந்தேன்......ஆ, என்ன இது! என் நாயகர் இன்னும் எஞ்சியுள்ளாரே. மகன்போனால் போகட்டும். என் தலைவர் கதி என்ன? நானே அவருக்கும் இக்கதி நேராமல் உயிரோடிருப்பாரா?" இக்கருத்து அடங்கியுள்ள கந்தபுராணப் பாட்டு வருமாறு :

" நையா நிற்கும் தேவர்தமக்கு நனிதுன்பம்
செய்யா நிற்றல் நன்றல என்றேன்; தேராது
ஐயா, நின்னைத் தோற்றனன்; மன்னன் அவனுந்தான்
உய்வான் கொல்லோ? தன்னுயிர்தானும் ஒழியாதே."

ஆகவே, இதுகாறும் கூறியவாற்றால், இளமைப் பருவத்தில் கணவனைப் புறக்கணித்துக் குழந்தையைப் பராமரிக்கும் பெண்ணுள்ளம், முதிர்ந்த பருவத்தில் மகனுடைய துயரத்தைப் பொருட்படுத்தாமல், கணவனே இனியவன் என நினைத்து, அவன் நலத்திலேயே நாட்டம் கொள்ளுகிறது என்னும் பெற்றியை ஒருவாறு காட்ட முயன்றேன். இதில் சிறப்பு என்னவென்றால், மக்கள் மனத்துக்குள் நடக்கும் போராட்டங்களை உள்ளங்கை நெல்லிக் கனியென எடுத்து எழுதிக்காட்டும் தமிழ்க் கவிஞர்களது கைவண்ணந்தான். உண்மையில், இத்துறையிலே தமிழ்க் கவிஞர்கள் ஈடும் எடுப்பும் அற்றவர்களாக இருக்கிறார்களெனப் பல மொழிகளைப் பயின்ற புலவர்கள் கூறுகின்றார்கள்.

தமிழ்க் கவிஞர்மரபு வாழ்க!

கந்தரனுபூதி

(ம. ப. தியாகராஜன், பி. ஏ.)

மாயையை ஒழிக்க

மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறு மொழிந்தும் ஒழிந்திலனே
யகமாடை மடந்தைய ரென்றயருஞ்
சகமாயை யுள்நின்று தயங்குவதே. (5)

"வளைபட்டகை மாதொடு மக்களெனும் தளை" நீங்கப் பெற்ற துறவு நிலையிலும் பலர் உலக மக்கள் தம்மைப் புகழ வேண்டுமென்ற ஆசை கொண்டோ, தாம் குறைபாடுகள் என்று எண்ணியவற்றை நீக்கப் பலரையும் தம் கொள் கைக்கு ஆளாக்க வேண்டுமென்ற எண்ணங் கொண்டோ, பலவாறாக ஜகமாயையுள் அகப்பட்டு அல்லற்படுகின்றனர். அப்படிப்பட்ட சூழ்நிலையினாலும் நான் உன்னை அடைய வேண்டும் என்ற நெறியை மறந்து தயங்கலாகாது என்று வேண்டுவதே இப்பாடலின் கருத்தாகும்.

இறைவனின் திரோபவ சக்தியால் ஏற்படுவதே மாயை. அது சிவனை ஜீவர்கள் அறியவொட்டாமல் மறைக்கிறது. அது அருட் சக்தியால்தான் நீங்கவல்லது. "மகமாயை களைந்திடவல்ல பிரான்" என்றதனால் அருளற் சக்தியைக் கொண்ட ஆறுமாமுகனே யென்று பொருள் கொள்ள வேண்டும். அவ்வாறு முருகக் கடவுள் ஆறு முகங்களா லும் உபதேச மொழிகளாகிய வேதாகமங்களை விரித் துரைத்த போதிலும் என்பது "முகமாறும் மொழிந்தும்" என்ற தொடரின் கருத்தாகும். அவ்வுபதேச மொழிகளைக் கற்றும் மாயையுள் நின்று தயங்கிக்கொண் டிருக்கின் றேனே? "நிகைத்தால் தேற்றுயோ!" என்று கேட்ட படியாம். இதே கருத்துத் தோன்ற சிதம்பர சுவாமிகள் திருப்போரூர்ச் சந்நிதி முறையில் பின்வரும் பாடல்களைப் பாடியுள்ளார்.

"பழுதை பாம்பலவென் றொளியாற் கண்டும்
பாம்பு வாதனை தீராதவ னென
எழுமுன் சிற்சுகம் நின்னருளாற் கண்டும்
இந்நிலைப் பொய்மை வாதனை நீங்கிலேன்."

"கனவிலே கண்ட காட்சிகள் யாவுமக்
கனவிற் பொய்யெனக் கண்டுதனைக் கண்டேன்
பினையும் அந்தக்கனவினை மெய்யெனப்
பேணுமாறு மயங்கினேன் பேதையேன்."

பரோக்ஷ ஞானம்:—"சச்சிதானந்த" ஈஸ்வரனுளனென் றும், அவன் ஒருவனே மெய்ப்பொருளென்றும் நிச்சய

புத்தியைத்தரும். அது சற்குரு சற்சாஸ்திர வசனங்களில் விசுவாசம் வைத்துக்கேட்டலால் உண்டாகும். அபரோக்ஷானுபூதி எய்துவதற்கு அம்மெய்ப்பொருளை, சதா சிந்தித்து அவனருளைப் பெறல் வேண்டும். அபரோக்ஷ ஞானத்தால் ஜகமாயையினின்று நான் இன்னும் தெளிவு பெறவில்லையே என்ற அனுபூதி நிலையை இப்பாடல் உணர்த்துகிறது. " கற்றதும் கேட்டதும் அவலமாய்ப் போதல் நன்றோ ?" என்று தாயுமானவர் வேண்டுவதும் இந்நிலையைப் பற்றியதுதான். கல்வி கேள்விகளினால் பரோக்ஷ ஞான மெய்திய பின்னர் திட அபரோக்ஷானுபூதி எய்த விழைதலையே இப்பாடல் குறிக்கிறது. எனவே பரோக்ஷ ஞானத்தால் பக்குவமடைந்தவர்கள் அபரோக்ஷ ஞானமடையப் பயிலும் காலத்தில் இப்பாடலின் மனனம் முருகனருளைக் கூட்டுவிக்கும்.



மூலமந்திரம் — குருங்கிருங்
நைவேத்தியம் — பால் பழம் சர்க்கரை

மதிப்புரை

மூத்த நாயனார் திரு இரட்டை மணிமாலை உரை :- கபிலதேவ நாயனாரால் இயற்றப்பெற்றுப் பதினோராம் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ள இந்நூல், விநாயகப் பெருமானின் துதிநூலாய்ச் சொற்பொருட் சுவைநலங்களும், திரிபு முதலிய அணிகளும் அமைந்து சிறந்து விளங்

குவது. இந்நூலுக்குச் சென்னையரசின் உணவு உழவுத் துறைத் துணைச்செயலாளரும், நமது சமாஜத் தலைவருமாகிய இராவ்சாகிப்-திரு. நல். முருகேச முதலியார், பி. ஏ. அவர்கள் எழுதிய இனிய எளிய சிறந்த உரைநூலே இது. உரையா சிரியர் அவர்கள் திருமுறைகளிலும் மெய்கண்ட நூல்களி லும் மிக்க பற்றும் பயிற்சியும் உடையவர்கள். சான்றாண் மைக்கு ஆழி எனத் தக்கவர்கள். "முன் இளங்காலத்திலே பற்றினேன்" எனக் கபிலதேவ நாயனர் பாடுதல் போலத் தாமும் தம் பதினொன்றாம் அகவை தொட்டு, மிக இளமைக் கால முதலே, விநாயகரை வழிபடு கடவுளாகக் கொண்டு அயரா அன்பிற் றிளைத்து ஒழுகி வருபவர்கள். விநாயகர் வழிபாட்டால் எல்லா நலங்களையும் இம்மையே பெறலாம் என்னும் உண்மையை அநுபவப் பொருளாக உணர்ந்தவர் கள். விநாயகரின் அடியார்களுக்கு 'நல்லார்' என்பதொரு பெயர் உண்டுபோலும்! "களியானைக் கன்றைக் கண பதியை...நண்ணுவதும் நல்லார் கடன்" எனக் கபில தேவ நாயனரும், "பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே" என மெய்கண்டார் பெருமானும் குறித்திருத்தல் காணலாம். அக் குறிப்பும் அமைய உரையாசிரியரின் பெயரில் 'நல்' என்ற அடைமொழி இயல்பாக அமைந்து, அவர்தம் விநாயக பக்தியை விளக்கும் சான்றாக நிலவுகின்றது. இவ் வுரையின்கண், திருவாக்கும் - உருவாக்கும் 1, வேழத் திரு முகம் 4, முன் இளங்காலம் 12, தலைதொட்டிருத்தல் 13, வேட்கை வினைமுடித்து 15, நாமம் வரும் 17, பாரோர்க் குதவும் 18 முதலிய பல தொடர்களுக்கு எழுதப்பட்டுள்ள சிறப்புரைகள் பெரிதும் பாராட்டற்பாலன. மேற்கோட் பாடல்களினால் உரையாசிரியரின் பரந்த கல்வி யறிவு புலனா கின்றது. "விநாயகர் வரலாறு" என்னும் பகுதி விநாய கத் திருவுருவின் தத்துவ நுட்பங்களைத் தகவுறத் தெளிவிக் கின்றது. இவ்வுரையைப் படிக்குங்கால், "நல்லார் - கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்" எனச் சிவஞான சுவாமிகள் எழுதியிருப்பது, இவ்வுரையாசிரியர்க்கு எத் துணைப் பொருத்தமாக இருக்கின்றது என எண்ணி, நம்ம னோர் நெஞ்சம் விம்மிதம் எய்தி மகிழ்கின்றது. தமது வழி படு கடவுளாகிய அரசடிக் கற்பக விநாயகர் திருவருளால், உரையாசிரியர் இதுபோன்றே இன்னும் பல அரும் பெரும்

நூல்களை இயற்றிச் சைவமும் தமிழும் நீடினிது வளர்ப்பா ராக என, விநாயகப் பெருமான் திருவருளையே வேண்டி வழுத்துகின்றோம். இந்நூல் வேண்டுவோர், "வித்துவான்-ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், தருமையா தீனப் பிரசார நிலையம், 41, உஸ்மான் ரோட், சென்னை 17" என்னும் முகவரியிற் பெறலாம். —முருகவேள்

ஜெயமதி:—நமது சமாஜப் பெரியார்களுள் முதன்மை மிக்கவராய் விளங்கிவரும் கோவைகிழார்-இராவ்பகதூர்-உயர்திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ.,பி.எல். அவர்கள் இயற்றியளித்துள்ள ஒரு வரலாற்றுக் கவிதைநூல் இது. பண்டைநாளிற் காமரூபம் எனப் பெயர் பெற்றிருந்த ஆசாம் (Assam) நாட்டின்கண் கி. பி. 1680 முதல் 16?6 வரை அரசோச்சிய காதர்சிங்கு என்னும் மன்னனுடைய கற்பிற் சிறந்த மனைவியாகிய ஜெயமதி என்பாள், சூலிபகன் என்னும் கொடுங்கோலனால் பதினாறு நாட்கள் பலவகைக் கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டும், தன் கணவனைக் காட்டிக்கொடுக்கச் சிறிதும் இசையாமல், வீரமும் தியாகமும் கற்பும் விளங்க உயிர்துறந்த வரலாற்றுச் செய்தியை, எளிய இனிய அழகிய கவிதை வடிவில் விளக்கு கின்றது இந்நூல்! ஜெயமதியின் சிறப்பினை,

"பேர்சொன்னாற் புண்ணியமாம் பெயரிட்டாற் புனிதமுமாம்
ஊர்சொன்னால் உணர்ச்சிஎழும் உத்தமியின் மாண்பதுவாம்
அத்தன்மை மாதரசி அசாமியர்நாட் டெழிலரசி
நித்தமுமே எக்குடியும் நினையாதார் எங்குமிலை"

என ஆசிரியர் பாடியிருப்பது, நூற்றலைவியின் உயரிய பண்பு இனைத்தென உணர்த்துகின்றது. ஷாஜஹான் தன் மனைவியின் நினைவாகக் கட்டிய தாஜ்மகால்போன்று ஜெய மதியின் நினைவாக அவள் புதல்வன் உருத்திரசிங்கு என் பான் தான் அரசாட்சி எய்தியபோது ஆசாம் நாட்டில் ஜெயசாகரம் என்ற மாபெரும் ஏரியை வெட்டினான். இவ் விரு நினைவுச் சின்னங்கள் பற்றி,

"வனப்பென்னும் தேவதையை வணங்குவதாம் ஒன்றாகில்
நினைப்பறியாத் தியாகமதின் நெறிபோற்றும் மற்றொன்றே"

என ஆசிரியர் விளக்கி யிருப்பது பாராட்டற்குரியது.

இங்ஙனம் இடையிடையே போதரும் சீரிய கருத்துக்களும், செய்யுட்களும் மிகப் பலவாம். அவையனைத்தும் படிப் பார்க்குச் சுவையும் இன்பமும் பயப்பனவாய்த் திகழ் கின்றன. ஆசிரியர் அவர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் விரிவாக எழுதியுள்ள முன்னுரை, நூற்பொருளின் சிறப்பினை நன்கெடுத்து நுவலுகின்றது. சென்னை மாநிலத் தின் மாட்சிமை மிக்க ஆளுநர் திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள் இந்நூற்குச் சிறந்ததோர் அணிந்துரை அளித்துள்ளார்கள். இக்கவிதை நூலைப்போலவே, ஆசிரியர் அவர்கள் தாம் நாடோறும் காலை மாலை வேளைகளில் உலாச் செல்லுங்கால் தோன்றும் அரிய கருத்துக்களை யெல்லாம் ஒன்றுவிடாமல் நீண்டகாலமாக அவ்வப்போது ஒழுங்குபட முறையாக நாள் முதலியன குறிப்பிட்டு எழுதி வைத்துள்ள பல்லாயிரக் கணக்கான பாடல்களும், தக்க நூல்வெளியீட்டாளர்கள் (Publishers) யார் வாயிலாகவேனும் வெளிவர வாய்ப்பு நேர்ந்தால், அவைகள் யாவும் தமிழகத்திற்குச் சிறந்த கவிதைச் செல்வமாக விளங்கும். அத்துறைவாணர்கள் ஆசிரியர் அவர்கள்பால் தொடர்புகொள்ள முயன்று ஆவன செய்து, தமிழகத்திற்கு உதவ வேண்டுகின்றோம். ஜெயமதி என்னும் இக்கவிதை நூல் வேண்டுவோர், "கோவை கிழார், 4/89, திருச்சிப் பாதை, கோயம்புத்தூர்" என்னும் முகவரியிற் பெறலாம். விலை. ரூ 3. —முருகவேள்

திருப்போரூர்ச் சிறப்பு நிகழ்ச்சிகள்

2—10—58 வியாழக்கிழமை கிருத்திகையன்று மாலை 4-மணிக்குத் திருப்போரூரில் முருகன் செந்தமிழ்க் கழகத் தொடக்க விழாவும், நமது சைவ சித்தாந்த மகாசமாஜத் தின் புரட்டாசி மாதக் கூட்டமும் ஒருசேர மிகவும் சிறப் புற நடைபெற்றன. திருப்போரூர் ஆதீன இளவரசு, பொம்மபுர ஆதீனம், அருட்டிரு. வித்துவான் சிதம்பர சிவப் பிரகாச சுவாமிகள் அவர்கள் விழாவிற்கு வந்திருந்தோர் அனைவர்க்கும் இனியதொரு வரவேற்புரை நிகழ்த்தினார்கள். சைவப் பெரியார், திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை. B.A., L.T. அவர்கள் நம் சமய வளர்ச்சி குறித்தும் நாம் செய்யவேண்

டிய ஆக்க வேலைகள் பல குறித்தும் ஆர்வமுற விளக்கி, முருகன் செந்தமிழ்க் கழகத்தினைத் தொடங்கி வைத்துத் திறப்புரை ஆற்றிச் சிறப்பித்தார்கள். சமாஜத் தலைவர்-திருமிகு. இராவ்சாகிப்-நல். முருகேச முதலியார், B.A. (சென்னை அரசின் உணவு உழவுத்துறைத் துணைச் செயலர்) அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கி அரிய பல கருத்துக்களை வெளியிட்டார்கள். முருகன் செந்தமிழ்க் கழகம் "திருப்போரூர்ச் சந்நிதி முறை"யினை மக்களிடையே பெரிதும் பரப்புதல் வேண்டும் என வற்புறுத்தி, அதன் நயங்கள் பலவற்றையும் தெளிவுறுத்தினார்கள். பின்னர்த் திருவாளர்கள் - வித்துவான் - சிவ. சுப்பிரமணியம், புலவர் முருகவேள், வித்துவான் - அம்பை சங்கரனார் ஆகியோர் முறையே "எங்காயினும் வரும்" "இறை வழிபாடு" "சமயத் தொண்டு" என்னும் பொருள்கள் பற்றிச் சிறந்த இனிய விரிவுரைகள் செய்தனர்.

அதன் பின்னர், பொம்மபுர ஆதீனத் தலைவர் மயிலம் - ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய தேசிக சுவாமிகள் அவர்கள், அருளுணர்ச்சி ததும்பச் சுவை மிகுந்த சிறந்ததோர் இனிய வாழ்த்துரை வழங்கியருளினார்கள். அதன்கண் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், திருக்கோயில் திருமடங்கள் ஆகியவற்றை அனைவரும் போற்றிக் காக்கவேண்டிய முறைகளையும் பொறுப்புகளையும் நன்கினிது விளக்கி, இதுபோது தமது அருளாட்சியின் கீழ்ப் போந்துள்ள திருப்போரூர் ஆதீனத்தின் தொண்டுகள் பல்லாற்றானும் மக்கள் அனைவர்க்கும் பயன்படுதற் பொருட்டே, மயிலத்திற் போன்று இங்கும் முருகன் செந்தமிழ்க் கழகத்தினைச் சைவ சித்தாந்த மகாசமாஜத்தினரின் ஒத்துழைப்புடன் தொடங்க வேண்டுமென்று தாம் விரும்பியருளினார் என்றும்; வார வழிபாட்டுக் கழகங்கள் பல தொடங்கி இயங்கவைத்து வரும் கைவளஞ்சான்ற பெருமகனாராகிய உயர்திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களே மயிலத்திலும் பல ஆண்டுகட்கு முன்பு முருகன் செந்தமிழ்க் கழகம் தொடங்கிவைத்தவராதலால், அவரே இங்கும் அதனைத் தொடங்கிவைத்தது பெருஞ்சிறப்பு என்றும்; மயிலத்தில் முருகன் செந்தமிழ்க் கழகம் தொடங்கப்பெற்றதன் விளைவாகவே மயிலம் தமிழ்க் கல்லூரி - உயர்நிலைப்பள்ளி முதலியன ஏற்படவும், பல

நூறு மாணவர்கள் புலவர் பட்டம் பெற்றுத் தமிழ்நாடெங் கணும் பரவித் தொண்டாற்றவும் வாய்ப்புகள் உண்டாயின என்றும்; மயிலம் கல்லூரியிற் பயின்ற மாணவராகிய **அருட்டிரு. இராமசாமி அடிகளார்** பேரூரிலும் **சாந்தலிங்கர் கல்லூரி** ஒன்றைத் தொடங்கிச் சிறந்த பல பெருமக்களின் உதவியோடு நடத்தி வருவது பாராட்டத்தக்கது என்றும்; அதுபோலவே திருப்போரூரிலும் முருகன் அருளால் - முருகன் செந்தமிழ்க் கழகத் தொண்டின் பயனாகத் தமிழ்க் கல்லூரி ஒன்று கூடிய விரைவில் தோன்றுதல் கூடும் என்றும்; இத்தகைய சீரிய செயல்கள் பலவும் நடைபெறு தற்கு இப்பகுதிகளில் உள்ள மக்கள் அனைவரும் ஆதரவும் ஒத்துழைப்பும் தந்து ஊக்கமூட்டி, முருகன் அருளைப் பெற்று உய்யவேண்டும் என்றும்; ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள், ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள், ஸ்ரீமத் சிவஞான பாலைய தேசிக சுவாமிகள் ஆகிய சான்றோர் பெருமக்களின் ஆசியும் அருளும் முருகன் அடியார்களாகிய உங்களுக்கு நிரம்ப உண்டாவதாகுக என்றும் கூறிமுடித்து, வாழ்த் துரை வழங்கியருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய வாழ்த் துரையின் வாயிலாக அவர்களின் வடமொழி தென் மொழிப் புலமையும், சொல்வன்மையும், ஆட்சியுணர்வின் திறனும், எளிய இனிய அருளியற் பண்பும் பிறவும் அறிந்து அனைவரும் பெரிதும் வியந்து மகிழ்ந்தனர். முடிவில் திருப் போரூர் ஆதீனம் கட்டளை **ஸ்ரீமத் சிதம்பர சிவராமசுவாமிகள்** இலக்கியச் செறிவும் நயமும் மிக்க வகையில் நன்றியுரை நவின்றருள விழா இனிது நிறைவெய்தியது. இந்நிகழ்ச்சி களால் திருப்போரூரில் இம்மாதக் கிருத்திகை விழா, ஒரு பெருஞ் சிறப்பு விழாவாக விளங்கி முருகன் அடியார்களுக் குப் பெருமகிழ்ச்சி விளைத்து இன்புறுத்தியது.

சமாஜ அறிக்கை

12—10—1958-ல் சமாஜ நிர்வாக சபைக் கூட்டம் சென்னை, இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் காலை 9-30 மணிக்கு நடைபெறும். செயற்குழு வினர் அனைவரும் வருக.

நடராசர்

" குறியொன்றும் இல்லாத கூத்தன்றன் கூத்தைஎனக்கு
அறியும்வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே "

உலகிற் பிறந்த நாம் துன்பமடைகிறோம். அதனை நீக்கி இன்பமடைவதே எல்லா உயிர்களும் செய்ய வேண்டிய காரியம். எல்லா உயிர்களும் துன்பத்தை வெறுக்கின்றன. இன்பத்தை விரும்புகின்றன. ஆனால் இன்பமடைகின்றதில்லை. அதற்குள்ள முயற்சி மட்டும் இருக்கிறதே தவிர நினைத்தபடி பயன் பெறுகிறதில்லை. அது மட்டுமல்ல. இன்பத்திற்காக முயல்கின்றபோது அதிக துன்பம் வருகிறது. இதற்கெல்லாம் காரணம் யாதென நாம் ஆராய்ந்தறிய வேண்டும்.

மனிதர்களாகிய நாம் அறிவுடையோம். மன்-அறிதல் (to think) என்பது பகுதி. ஆதலால் நாம் அவ்வறிவு கொண்டு ஆராயும்போது மூன்று பொருள்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவைதாம் - அறிகின்ற நாம், நம்மால் அறியப்படுகின்ற உலகம், நம்மை அறியும்படி செய்து அறிவிக்கின்ற பொருள் என்பன. வேதங்கள் நான்கு என்பாராயினும் அதர்வண வேதம் மந்திர சொரூபமாக நிற்க ஏனை மூன்றுமே முக்கியமாகக் கணக்கிடப்படும். வேதங்களுக்குத் திரயீ என்று பெயர் உண்டல்லவா? இவற்றில் மத்தியில் உள்ளது யசுர்வேதம். அதின் மத்திய கண்டத்தில் மத்தியில் உள்ளது ஸ்ரீருத்திரம் என்னும் பகுதி யாகும். அதில் பசூ நாம் பதயே நம என்ற மந்திரம் பேசப் படுகிறது. சிவ அஷ்டோத்திரம் என்னும் அர்ச்சனை மந்தி ரங்களிலே பசுபதயே நம என்ற ஒரு மந்திரம் கேட்கப்படு கிறது. இவைகள் பசுக்களுக்குப் பதியே உன்னை நமஸ்கரிக் கின்றேன் என்று பொருள்படும்.

பசு என்றால் கட்டப்படுவது என்று பொருள். பச் - கட்டுதல் என்பது பகுதிப் பொருள். நம்முடைய வீட்டில் பசுக்கள் இருக்கின்றன. அவைகள் தம்மிஷ்டப்படி வாழ முடியாமல் நாம் தரும் சிறிது அளவேயாகிய புல், தட்டு முதலிய அரைவயிற்று உணவு உண்கின்றன. கஞ்சி முதலிய அசுத்த நீரைப் பருகுகின்றன. காற்று-வெயில்-மழைக்கு உதவாத கட்டுத்துறையில் தங்குகின்றன. அந்தக் கட்டுத்

துறை, வீட்டின் புறக்கடையில் இருக்கும். இவ்வளவு அவைகள் துன்பப்படக் காரணம் அவை கட்டுப்பட்டிருப்பதே யாம். அதுபோலவே உயிர்களாகிய நாமும் பசியாலும் தாகம் வெயில் மழை முதலிய உபாதிகளாலும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறோம். நம் வீடும் பசுவின் கட்டுத் துறை போன்றதுதான். இதற்கு வீடு என்ற பேரும் பிசகானது. நமது வீடுகள் எல்லாம் கட்டப்பட்டவை. அவைகள் முதற் கட்டு இரண்டாங்கட்டு எனக் கட்டேயாவனவன்றி வீடாகா. இவ்வாறு பசுக்கள் போல நாம் கட்டுப்பட்டுத் துன்பம் கொண்டிருப்பதால் நாமும் பசுக்களேயாவோம். நம்மைப் பசுக்கள் (கட்டப்பட்டவை) என்று சாத்திரங்கள் பேசும். பசுக்களாகிய நாம் இருக்கிறோம் என்றும், நாம் கட்டுண்டு துன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்றும் நாம் தெரிந்துகொண்டோம். இதையும் சிலர் ஒப்புக்கொள்ளாமலிருக்கலாம். ஆனால் நாம் என்றதற்குப் பொருள் உண்டு என்பதை மறுக்கமுடியாது.

இனிக் கட்டுப்பட்ட நாம் உண்டு என்று பசு என்ற பதத்தால் தெரிகிறபோது அந்தப் பதத்திலிருந்தே நம்மைக் கட்டி நிற்கிற பாசம் என்று மற்றொரு பொருளும் உண்டென்று தெரிகிறதல்லவா ?

இவை யிரண்டும் பெறுகின்றபோது கட்டினின்றும் நம்மை விடுவித்து இன்பம் தருவதாகிய பதியொருவன் உண்டென்று தெரிகின்றோம். அதுவே நம்மை அறியும்படி செய்கின்றது. நாமே பொருள்களை அறியலாமே எனின் அறியலாகாது. நமது கண்ணால் பொருள்களைப் பார்க்கின்றோம். ஆனால் கண் தானே பார்க்கின்றதில்லை. தன்னையும் பார்க்கின்றதில்லை. அதற்குப் பொருள்களைக் காட்டுகின்ற சூரியன் முதலிய பிரகாச பதார்த்தங்கள் வேண்டும். சூரியனில்லாத விடத்துக் கண் பார்க்காது. கண்களும் சூரியனும் இருந்தபோதிலும் அறிகின்ற ஆத்மபோதம் என்ற உயிரறிவு இல்லாமற் போனால் கண் பார்க்காது.

> " காட்டிய கண்ணே தனைக்காணா ; கண்ணுக்குக்
> காட்டாய உள்ளத்தைக் கண்காணா ;—காட்டிய
> உள்ளம் தனைக்காணா ; உள்ளத்தின் கண்ணாய
> கள்வன்தான் உள்ளத்திற் காண் "

என்பது சிவஞான போதம்.

இப்படிப்பார்த்து உலகத்தையும் நம்மையும் ஆராய்ந்து நம்மைப் பந்தித்துத் துன்பம் செய்யும் கட்டுகளைத் தெரிந்து அவற்றை நிவர்த்தித்துக் கொள்வதற்கு அறிவு வேண்டும். அறிவுதான் ஞானம் எனப்படும். அது ஒளியுருவம். ஞானமே இன்பம் தருவது. இது எல்லாவற்றிற்கும் பொருந்தும். ஆகவே அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தைப் பெறவேண்டுவது நமது கடமை. அதற்கே நாம் முயற்சிக்க வேண்டியது. இது முழு ஞானவடிவாகிய-முழு ஒளிவடிவாகிய பதியின் அருளினால்தான் இயலும்.

இதற்கு நாம் பதியின் அருளைப் பெறவேண்டும். அதற்குப் பதியை நாம் தெரியவேண்டும். ஆனால், பதி அப்பிரமேயன் அதாவது அறிய முடியாதவன் எனப் பெறும். அறியமுடியாதது, சொல்ல முடியாதது, நினைக்கமுடியாதது என்றெல்லாம் வேதங்கள் பேசும். அதை 1 நினைக்க 2 பூசிக்க 3 வந்திக்க வேண்டும். நினைத்தலே தியானிப்பது என்று சொல்லப்பெறும். பூசை செய்வது என்றால் பூ—ஜா=பூ-போவது, ஜா-உண்டாவது என்று அர்த்தம். நம்முடைய துன்பம்-மலம்-எல்லாம் போக்குவது, இன்பம் எல்லாம் உண்டாக்குவது எதுவோ அதுவே பூசையாம். வந்திக்கிறது வாயினால் வாழ்த்துவதாம். இம்மூன்று செய்கைகளையும் நாம் இறைவனிடத்தில் செய்வோமானால் துன்பம் நீங்கி இன்பம் பெறுவோம். இவைகளை நாம் அவனிடத்தில் செய்யும் பொருட்டுத் திருமேனியிலாத அவன் திருமேனி தாங்குகிறான். அந்தத் திருமேனிகள் மூன்று வகைப்படும். அவை அருவம்-அருவுருவம்-உருவம் என்பன. இவைகளை அரூபம்-ரூபாரூபம்-ரூபம் என்றும் சொல்வர்.

"அருவமோ உருவா ரூபம் ஆனதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்னின்
அருவமும் உருவா ரூபம் ஆனதும் அன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக் குள்ள வாமே"

என்பது சிவஞான சித்தியார்.

அரூபம் கண்ணாற் காணமுடியாதது, மனத்தால் மட்டும் தியானிக்கத்தக்கது. புருவ நடுவில் சோதி சொரூபமாய்த் தியானிப்பர். ரூபாரூபம் சிவலிங்கமாம். இதுவே நாம் பூசித்துச் சுகம் பெறுவதற்காக இறைவன் கொள்ளும்

திருவுருவம். இது கண்ணுற் காணப் பெறுவதால் உருவ முடையதாம். ஆனால் இன்னதென்று சொல்லக் கூடாத தாய்க் கைகால் முதலிய அவயவப் பகுதியில்லாததாய் நீண்டு வட்டமாய் இருத்தலால் அருவமாம். எனவே ரூப முண்டு-ரூபமில்லை என்ற இரண்டு தன்மையும் இருப்பதால் இதற்கு அருவுருவம் என்று பெயர். இதுவே பூசிக்கத் தக்கது.

" காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம் "

என்பது பெரிய புராணம்.

இனி வந்திக்கத்தக்க திருமேனி நடராசர் உருவமாம். நாம் கோயிலில் வைத்து வந்திக்கும் ஒவ்வொரு ரூபமும் ஒவ் வோர் அர்த்தமுடையது. அவற்றை ஒன்றும் தெரிந்து கொள்ளாமலே நாம் இருந்து வருவது வருந்தத் தக்கது. கோவிலுக்கு வருவோர்களிற் பெரும்பாலோர் ஒன்றும் தெரியாமல் இது என்ன சாமி? என்று கேட்டுத் தெரிந்து கொள்ளும் நிலையில் இருக்கிறார்கள். இது என்ன சாமி என்றால் விநாயகர் என்று ஒருவன் சொல்லக் கேட்டதும், சரியென்று அதற்கு ஒரு அரைக்கும்பிடு போட்டு விட்டு அப்புறம் போகிறார்கள். சாமியும் தெரி யாது; அதனைக் கும்பிடும் முறையும் தெரியாது. இந்த நிலை யைச் சீர்திருத்திக்கொண்டால்தான் நமது சமய வாழ்க்கை செவ்வனே நடைபெற்று, நமக்குத் துன்பம் நீங்கி இன்பம் நிகழ்வதாகும்.

கடவுள் நமக்காக ஐந்தொழில்கள் செய்கிறார். உலகத் தைப் படைக்கிறார்; அவற்றைக் காப்பாற்றுகிறார்; சம்மரிக் கிறார்; இளைப்பாற்றுகிறார்; அநுக்கிரகம் செய்கிறார். இதுவே இவரது ஐந்தொழிற் கூத்து-நடனம்-என்று சொல்லப் பெறும். நடராசர் உருவத்தில் நான்கு கைகளும் இரண்டு கால்களும் பார்க்கிறீர்கள். இரு கைகள் வலத்தில் ஒன்றும் இடத்தில் ஒன்றும் தூக்கியிருக்கும். அவற்றிலே வலக் கையில் டமருகம் என்னும் உடுக்கை யிருக்கும். உடுக்கை ஒலியை உண்டாக்கும். அதுவே நாதத்தைக் காட்டுவது. நாதமே உலக சிருஷ்டிக்குக் காரணம். இந்தக் கை சிருஷ்டி கர்த்தா நான் என்பதைக் காட்டும். மற்றொரு வலக்கை பயப்படாதே என்ற குறிப்புடன் அபயமாக அமைந்திருக்

கும். அது சிருஷ்டிக்கப் பெற்ற உலகத்தை "அஞ்சல்! உங்களைக் காப்பாற்ற நானிருக்கிறேன் !—காத்தற் கடவுள் நானே !" என்று காட்டும். தூக்கிய இடக்கையில் உள்ள அக்கினி-நெருப்பு சங்கார கர்த்தா நானே என்று காட்டும். நெருப்புத்தான் உலகங்களை அழிக்கிறது. அது சங்காரம். என் கையிலிருக்கிறது என்று குறிக்கிறது.

"தோற்றம் துடியதனில் ; தோயும் திதியமைப்பில் ;
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் ;—ஊற்றமாய்
ஊன்றுமலர்ப் பாதத்தே உற்றதிரோ தம்;முத்தி
நான்றமலர்ப் பாதத்தே நாடு"

என்பது 'திருவதிகை மனவாசகங் கடந்தார்' அருளிய திருமொழி.

அவருடைய கால்களில் வலது பாதம் ஊன்றியிருக் கிறது. அது ஒரு அரக்கனுடைய உருவத்தை மிதித்துக் கொண்டிருக்கிறது. அந்த தலை நிமிர்ந்தபடியும், உடல் வேறு விதம் திருகலாகவும், கால்கள் மற்றொரு விதம் திருக லாகவும் ஆக மூன்று திருகலாக இருக்கும். இதற்கு முயலகன் என்று பேர். இந்தப் பாதம் உலகத்தில் போகங் களை உண்டு ஆடி இளைத்த உயிர்களைத் தன் கீழ் அமிழ்த்தி வைத்து இளைப்பாறச் செய்கின்றதாகிய திரோபவத் தொழில் செய்கின்ற கர்த்தா நானேயென்று அறிவிக்கிறது.

வெகு நேரம் விளையாடி இளைத்துப் போயும் மறுபடியும் தன்னை யறியாது தனக்குத் துன்பம் வருமாறு மேலும் மேலும் ஆட்டமே விரும்பி யலைகின்ற பிள்ளையைப் பிதா அடக்கி இழுத்து வந்து தன்னிடம் உட்கார வைத்து அவன் தப்பி ஓடி மறுபடியும் ஆட்டம் போட்டுக் கெடாதபடி அவன் மேல் ஒரு துடையையும் வைத்து அமிழ்த்திக் கொள் வதுபோல் உள்ளது இந்தத் திரோபவம் என்ற தொழிலாம்.

"மாயை தனைஉதறி, வல்வினையைச் சுட்டு,மலம்
சாய அமுக்கி,அருள் தான்எடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான்அழுத்தல்
தான்எந்தை யார்பரதம் தான்"

என 'உண்மை விளக்கம்' கூறுதல் காண்க.

இனிக் கீழ்த் தொங்கவைத்து வலதுபுறமாக வீசி நீட்டி யிருப்பது மற்றொரு இடக்கை. அதன்கீழ் இடக்கால் தூக்கி

வளைந்து வலது புறமாக நீட்டியிருக்கும். மேற்கண்ட இடது கை இந்த நீட்டிய இடது காலைக் காட்டிக்கொண்டிருக்கும். இந்தக் காலுக்குக் குஞ்சிதபாதம் என்று பெயர். குஞ்சிதம் = வளைந்தது. மேற்குவிந்த ஒரு அர்த்த வட்டவடிவாக நமது தலை இருக்கிறது. அனேக தலைகளில் வைத்து வைத்து இந்தக் கால் உள் வளைத்ததுபோல வுள்ளது. இந்தக் கால்தான் மீளா இன்பமாகிய முத்தி நிழல் தந்து உயிர்களை அனுக்கிரகிக்கின்ற பாதம். இதற்கு ஒரு மாலை போட்டு உபசாரமாகக் காட்டுவார்கள். ஆகவே அநுக்கிரகத் தொழிலைக் குறிப்பது ஒரு கையும் ஒரு காலும் என இரண்டுமாம்.

" கூற்றை யுதைத்த குரைகழற்கால் கும்பிட்டுத்
தோற்றம் துடைத்தோம் துடைத் தோமால் "

என்றார் பெரியார். இத்திருவடியே நாம் அடையத் தக்கது. சிந்தித்து வந்திக்கத் தக்கது. இவ்வாறுள்ள நடராசர் திருவுருவம் இறைவன் உயிர்களுக்குச் செய்யும் பரம உபகாரமாகிய ஐந்தொழில்களையும் விளக்கி நிற்பதாம். இதுமுழுதும் வட்டவடிவமாய் ஓங்காரமாகிய திருவாசியினுள் விளங்கும். ஓங்காரமாகிய பிரணவத்துள்ளே இவ்வருட் கூத்து நிகழும்.

" ஓங்கார மேநல் திருவாசி, உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் !—ஆங்காரம்
அற்றார் அறிவர்! அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின் !"

என வரும் சித்தாந்த சாத்திரப் பாடல் ஈண்டு அறிந்தின் புறற் பாலது.

" உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவாறார் பெறுவாரச் சோவே "

என்று மாணிக்கவாசக சுவாமிகள் அருளியிருக்கிறார்.

இவ்வாறுள்ள ஸ்ரீ நடராச மூர்த்தியினது பெருமைகளை அறிந்து வழிபட்டுத் துக்கங்களைப் போக்கிச் சுகம் பெற்றுய்வது அறிவுடைய மக்கள் கடமையாம்.

குறிப்பு :—இது திருப்பாதிரிப்புலியூர் மடத்தின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருப்பேரூர்க் கோயிலில் 24-10-1936 சனிக்கிழமை இரவு செய்த உபந்நியாசத்தின் சுருக்கம்.